# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# எட்டாம் பத்து

## நான்காம் திருமொழி - விண்ணவர்
## திருக்கண்ணபுரம் 4
## [தலைமகனிடத்து ஈடுபட்ட தலைவி ஆற்றாது தும்பியை நோக்கிக் கூறிய பாசுரம்]

** விண்ணவர் தங்கள் பெருமான் * திருமார்வன் *
மண்ணவர் எல்லாம் வணங்கும் * மலி புகழ் சேர் **
கண்ணபுரத்து எம்பெருமான் * கதிர் முடி மேல் *
வண்ண நறுந்துழாய் * வந்தூதாய் கோல் தும்பீ! 1

வேத முதல்வன் * விளங்கு புரிநூலன் *
பாதம் பரவிப் * பலரும் பணிந்தேத்தி **
காதன்மை செய்யும் * கண்ணபுரத்து எம்பெருமான் *
தாது நறுந்துழாய் * தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! 2

விண்ட மலர் எல்லாம் * ஊதி நீ என் பெறுதி? *
அண்ட முதல்வன் * அமரர்கள் எல்லாரும் **
கண்டு வணங்கும் * கண்ணபுரத்து எம்பெருமான் *
வண்டு நறுந்துழாய் * வந்தூதாய் கோல் தும்பீ! 3

நீர் மலிகின்றதோர் * மீனாய் ஓர் ஆமையுமாய் *
சீர் மலிகின்றதோர் * சிங்க உருவாகி **
கார் மலி வண்ணன் * கண்ணபுரத்து எம்பெருமான் *
தார் மலி தண் துழாய் * தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! 4

ஏரார் மலர் எல்லாம் * ஊதி நீ என் பெறுதி? *
பாரார் உலகம் * பரவப் பெருங்கடலுள் **
கார் ஆமையான * கண்ணபுரத்து எம்பெருமான் *
தாரார் நறுந்துழாய் * தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! 5

மார்வில் திருவன் * வலன் ஏந்து சக்கரத்தன் *
பாரைப் பிளந்த * பரமன் பரஞ்சோதி **
காரில் திகழ் * காயா வண்ணன் கதிர் முடி மேல் *
தாரில் நறுந்துழாய் * தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! 6

வாமனன் கற்கி * மதுசூதன் மாதவன் *
தார் மன்னு * தாசரதி ஆய தடமார்வன் **
காமன் தன் தாதை * கண்ணபுரத்து எம்பெருமான் *
தாம நறுந்துழாய் * தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! 7

நீல மலர்கள் * நெடு நீர் வயல் மருங்கில் *
சால மலர் எல்லாம் * ஊதாதே ** வாள் அரக்கர்
காலன் * கண்ணபுரத்து எம்பெருமான் கதிர் முடி மேல் *
கோல நறுந்துழாய் * கொண்டூதாய் கோல் தும்பீ! 8

நந்தன் மதலை * நிலமங்கை நல்துணைவன் *
அந்த முதல்வன் * அமரர்கள் தம் பெருமான் **
கந்தம் கமழ் * காயா வண்ணன் கதிர் முடி மேல் *
கொந்து நறுந்துழாய் * கொண்டூதாய் கோல் தும்பீ! 9

** வண்டமரும் சோலை * வயல் ஆலி நல்நாடன் *
கண்ட சீர் வென்றிக் * கலியன் ஒலி மாலை **
கொண்டல் நிற வண்ணன் * கண்ணபுரத்தானை *
தொண்டரோம் பாட * நினைந்தூதாய் கோல் தும்பீ! 10

**அடிவரவு:** விண்ணவர் வேதம் விண்ட நீர் ஏரார் மார்வில் வாமனன் நீலம் நந்தன் வண்டமரும் தந்தை

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---